# பாடம் - 8. பசுவுக்குக் கிடைத்த நீதி

**வகுப்பு: IV**

**பாடம்: தமிழ்**

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. இன்னல் - இச்சொல்லிற்குரிய பொருள்.

அ) மகிழ்ச்சி ஆ) நேர்மை **இ) துன்பம்** ஈ) இரக்கம்

2. அரசவை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்ப து -----------------

அ) அரச + அவை ஆ) அர+அவை **இ)அரசு+அவை** ஈ) அரச+வை

3.மண்ணுயிர் இச்சொல்லை ப் பிரித்து எழுதக் கிடைப்ப து -----------------

அ) மண்+ணுயிர் **ஆ) மண்+உயிர்** இ) மண்ண +உயிர் ஈ) மண்ணு+உயிர்

## ஆ. வினாவிற்கு விடையளிக்க.

**1. மனுநீதிச் சோழன் ஆராய்ச்சி மணியை அமைத்ததற்கான காரணம் என்ன ?**

மனுநீதிச் சோழன் தனது ஆட்சியில் குடிமக்கள் யாரும் துன்பப்படக் கூடாது என்று நினைத்தான். அதனால் ஆராய்ச்சி மணியை அமைத்தான்.

**2. பசு ஆராய்ச்சி மணியை அடித்தது ஏன்?**

அரசனின் மகன் தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும் போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறந்துவிட்டது. அதனால் துயருற்ற பசு ஆராய்ச்சி மணியை அடித்தது.

**3. பசுவின் துயரை மன்னன் எவ்வாறு நோக்கினான்?**

பசுவின் துயரைப் போக்க எண்ணிய மன்னன், தன் மகனை அதே தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவின் துயரைப் போக்கினான்.

## இ. அகரமுதலி பார்த்துப் பொருள் அறிக.

1. ஆற்றொணா - தாங்க முடியாத
2. வியனுலகம் - பரந்த உலகம்
3. செவி சாய்த்தல் - கேட்க விரும்புதல்
4. கொடியோன் - துன்புறுத்துபவன்
5. பரம்பரை - தொன்றுதொட்டு

## ஈ. சொல் உருவாக்குக.

1. இனிமை
2. மாலை
3. தீ
4. மகன்
5. பெண்
6. உண்மை
7. மான்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ழ | பு | உ | து | ர |
| தே | நே | ப் | ண் | லி | ர் |
| ரு | சோ | பெ | மை | னி | அ |
| ச் | வ | ச | வை | இ | தீ |
| ம | க | ன் | மா | லை | ணை |